
உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - கொக்குவில்

வேளாண் தொல்குடித் தோன்றல்

சைவத்திரு.

# இராமலிங்கம் இராசையா

அவர்கள்

சிவபதம் எய்திய ஞான்று கூறிய

## இரங்கற் பாக்களுடன் கூடிய

# நினைவு மலர்

ஆக்கம்: "செல்வம்"

*

— 1969 —

விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம் 290-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

---

யாழ்ப்பாணம் - கொக்குவில்

வேளாண் தொல்குடித் தோன்றல்

சைவத்திரு.

# இராமலிங்கம் இராசையா

அவர்கள்

சிவபதம் எய்திய ஞான்று கூறிய

## இரங்கற் பாக்களுடன் கூடிய

# நினைவு மலர்

சீர்பூத்த மறைநான்கின் முன்னே மேய
சிவம்பூத்த பிரணவமோர் வடிவ மானோன்
ஏர்பூத்த வடியர்செயன் முற்று மாற்று
னியல்பூத்த திருவருள்செய் தெங்கு நின்றோன்
பார்பூத்த விழவள நாட்டின் மேவும்
பயன்பூத்த திருநல்லைப் பதியில் வாழும்
கார்பூத்த கரிமுகவன் றனது பாதங்
கரம்பூத்த மலர்கொண்டே கருத்தின் வைப்பாம்.

*

— 1969 —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிவமயம்

# நந்தாவில் கற்புலத்து நாயகிபால் அருள் வேண்டல்

---

### ஆசிரிய விருத்தம்

ஐங்கரன் தனைத்தந்து அருமறைகள் புகழவரும்
அன்னையென வந்த உமையே
அரனவ னிடத்தியே ஆரியை பவானியே
அருளுதவ வேண்டு மம்மா
தங்குமுயர் கலைவளர முப்பத்தி ரண்டறம்
தளைக்கவருள் கின்ற தாயே
தஞ்சமென வுன்னையென் மனத்தினிடை வைத்துளேன்
தண்ணளிகொண் டென்னை யேற்பாய்
இங்குன்னை யல்லாது மற்றுமொரு துணையில்லை
இதுவேளை பாங்கு வந்தே
ஏழையென் குறையறிந் திரங்காது விடுவையோ
இல்லைநீ இறைவி தானே
கங்கையர வொடுதும்பை மதியணியு மெந்தைமுக்
கண்ணனின் தேவி யென்பர்
கண்ணனின் பின்னையே நந்தாவி லப்பதியின்
கற்புலத் தம்மை நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப அட்டவணை ( இராமலிங்கம் இராசையா )

( கர்ண பரம்பரை, காணி உறுதிகள், தோம்புகள், சரமகவிகள் போன்றவற்றின் துணைகொண்டு தொகுக்கப்பட்டவை. ஆராயவேண்டியவைகளும் உண்டு.)

**( 1 )**

பரராசசேகர முதலியின்வழி
|
வில்லவராயமுதலியார்
|
நற்குணமுதலியார்
|
காசிநாதர் ( கொக்குவில் ) X தெய்வயானைப்பிள்ளை
|
இராமலிங்கம் ( இராசையாவின் தகப்பன் ), முத்துப்பிள்ளை

**( 2 )**

~~மழவராய முதலியின்வழி~~
|
காசி உடையார் ~~(புத்தூர்)~~
|
தெய்வயானைப்பிள்ளை

**( 3 )**

~~சந்திரசேகர~~ முதலியின்வழி
|
சின்னத்தம்பி சிவில்தார்
|
சண்முகம்
|
சின்னத்தம்பி உடையார்
மனைவி சின்னச்சிப்பிள்ளை
(கொக்குவில்)
|
மூத்ததம்பி, சின்னவர், நடுவிலார், கந்தப்பர், தம்பாபிள்ளை, தங்கம்மா

**( 4 )**

பூதத்தம்பி முதலியின்வழி
|
கனகசூரியமுதலியார்
|
பெரியதம்பி ( ஆனைக்கோட்டை )
|
சீனியர், தையலம்மை

**( 5 )**

கொக்குவில் கந்தப்பர், X ஆனைக்கோட்டை தையலம்மை
|
துரைச்சாமி, பெரியதம்பி, சின்னத்தம்பி, நாகம்மா, ~~தையலம்மா~~, சின்னம்மா ( இராசையாவின் தாயார் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி விபரக் குறிப்புக்கள்

கொக்குவில் இராமலிங்கம் இராசையா; செட்டி வேளாண் குலத்தவரும், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தலையாளிச் செல்லையா உடையார், விடத்தல்தீவு உடையார், மெத்தை வீட்டு வேலுப்பிள்ளை என்ற பெயர்களுடன் சிவன் கோவில் வீதியில் செவ்வாய்க்கிழமை மடம் வைத்துத் தருமஞ் செய்த பெரியோர்களின் மைத்துனருமான கந்தர் கணபதிப்பிள்ளையின் மகள் செல்லம்மாவை மணந்து இல்லறம் நடத்தினர்.

**சகோதரர்கள் :** காங்கேசன்துறை வெளிச்ச வீட்டில் உத்தியோகம் பார்த்த செல்லையா, மலாயா–பினாங்கில் ஸ்ரேசன் மாஸ்ரராகச் சேவை செய்த சீனிவாசகம், கொக்குவிலில் வேளாண்மை செய்து வாழ்ந்த குட்டித்தம்பி என்ற ஆண்களும், செல்லம்மா, அமுகம்மா, பார்வதி என்ற பெண்களுமாவர்.

**மனைவி செல்லம்மாவின் சகோதரர்கள் :** தாவடியிலிருந்து வியாபாரம் செய்தவரும், கவிபுனையவல்ல சோதிடருமான கந்தையா, கொக்குவில் கிழக்கிலிருந்து வியாபாரம் செய்தவரும், பாடுவதில் வல்லமை உள்ளவருமான சின்னையா, மலாயாவில் – கோலாலம்பூரில் சேவையர் ஜெனரல் கந்தோர் உயர் உத்தியோகத்தரான பொன்னுத்துரை, கண்ணம்மா, சின்னத்தங்கச்சியாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சைவத்திரு. இராமலிங்கம் இராசையா அவர்கள் சிவபதம் எய்திய ஞான்று கூறிய இரங்கற் பாக்கள்

## நிரியாண தினம்—நேரிசை வெண்பா

**சீரணையுஞ் சௌமியத்துச் சித்திரைநா லேழுசனி**
**பாரபர பக்கம் பகர்தசமி — ஏரணையும்**
**நற்சதயம் நல்லோரை நம்பியுயர் ராசையா**
**சிற்பரனூர் தாள்சேர் தினம்.**

## அறுசீர் விருத்தம்

திருவள ரிலங்கைத் தீவின் சிரசெனும் வடபா லாங்கே
வருமருங் கல்வி செல்வம் வளர்ந்திடுஞ் சைவ மோங்கும்
மருவிய புகழின் மிக்க மதிப்புள தமிழ ராண்ட
ஒருபெரும் பதியா யுள்ள துயர்ந்தயாழ்ப் பாண மீதில்,

கல்விகொள் சாலை தாமுங் கடவுளா லயங்கள் தாமும்
நல்வளம் கொழிக்கும் சீரார் நவநிதிப் படுக்கை யசவும்
பல்வளம் சேர்த்து நிற்கப் பழம்பதி யிதுவே யன்ன
சொல்வளப் புலவர் போற்றத் தோன்றிய திங்கு மேலும்,

தெங்கொடு கமுகு தாலம் சீர்பலா வாழை தேமா
இங்கெலு மிச்சை தோடை இவற்றொடு நன்செய் புன்செய்
தங்கிய நாற்கூற் செல்வம் தழைத்திட வாழ்க்கை யோங்கப்
பொங்கிய புகழார் வஞ்சேர் பொலிந்திடு மின்னும் கேளீர்,

ஆண்டவன் அருள்பெற் றோங்கும் ஆண்மையும் வீரம் சேர
ஈண்டுயர் தலைமைப் பீடத் திருந்திடும் பெரியோர் கூடக்
காண்டகும் பெருமை தாங்கக் கற்புள அரிவை மார்கள்
மாண்டகைக் குணங்கள் தாங்கும் வளர்ந்திட மதிக்கு மாற்றல்,

சீர்மிகும் அளகை யென்னச் சிறந்திடும் தொழில்க ளோங்கும்
பேர்பெறும் வளங்க ளாரப் பெற்றகொக் குவிலே யென்பர்
ஏர்மிகும் காரைத் தேற்க இருந்தன ரன்னு ரெல்லாம்
பார்தனி லாக்க மோங்கப் பலவித நலமு மீந்தார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொக்கசீர்க் கமத்தை யோம்பித் தொல்வழித் தோன்றலாகி
மிக்கசீர் பெற்று வாழ்ந்து மேதினி வாழ்வை நீத்தே
நக்கனுர் பக்கம் சென்று நல்லதோர் பேறு பெற்ற
தக்கசீர் ராசை யாவின் சரித்திரம் சொல்லக் கேண்மின்

ஐம்பத்தறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருதங்க வீரமிகும் பரராஜ சேகரம்
கீர்த்திநிறை வில்லவ ராயர்
திகழ்ந்தவுயர் நற்குண முதலிவழி யாகவே
செனித்த காசி நாதர்
செல்வமிக வுடையராம் காசியுடை யார்மகள்
தெய்வானை தன்னை வேட்டுச்
செனனமுறு மீராமலிங் கந்தனைப் பெற்றுமே
சீர்செய்து பார்க்க வேதான்
செம்மைநிலை பதியானைக் கோட்டையில் வாழ்ந்திட்ட
சீராள னை சந்த்ர
சேகரமா னுமுதலி வழிவந்த நாமனே
சேர்சின்னத் தம்பி யுடையார்
செப்பவரு முயர்கனக சூரிய முதலிவழிச்
செல்வனுர் பெரிய தம்பி
செய்யபுவி தனிற்றந்த தையலம் மைத்தனித்
தேவிதரு சின்னம் மாதனை;

வருமிந்தக் காலைதனில் மணம்புரிந் தின்பமாய்
மாநிலம் தந்த மக்கள்
வடிவுமிகு செல்லையா சீனிவா சகப்பெருமன்
வள்ளலுயர் குட்டித் தம்பியும்
வனிதைபுகழ் செல்லம்மா அழகம்மா பார்வதி
மக்களொடு தோன்றி வந்தோன்
மாரனை நிகர்த்தவுயர் அழகனுர் இராசையா
மகிபனுர் செல்வ மோங்க
வர்த்தகம் வேளாண்மை செய்துமுயர் நிதிதேடி
வள்ளலென வாழ்ந்த சீரான்
மணம்செய்யத் தலையாளி செட்டிவே ளாளரென்
மரபினி லுயர்ந்த கோமான்
மருவுபுகழ்க் கந்தர்தரு கணபதிப் பிள்ளையென்
மாண்பு நிறைசட் டம்பியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலத் தேதந்த கந்தையா சின்னையா
மதிப்புவளர் பொன்னுத் துரையொடு
தருமிந்து நிகர்வதன கண்ணம்மை யனம்சின்னத்
தங்கச்சி யோடு வந்த
தண்ணளிகொள் செல்லம்மா தன்னைவேட் டேயினிது
தரணிதனில் வாழ்ந்த நம்பி;
தமிழினொடு சிங்களம் நன்குணர்ந் திருமொழியில்
தான்திளைத் திட்ட தோன்றல்
தக்காரென் தகவிலரென் றெண்ணாது யாவர்க்கும்
தானளித் துண்ட பேரான்
தரணியிற் பேர்பரவத் தந்தவுயர் மக்களார்
தலைமகளென் றோத முதலில்
தலைமையா சிரியரென் றுலகுளோர் போற்றவரு
தலைவ னார்கந்தை யாபிள்ளைன்
தன்னலம் கருதாத சித்திரா சிரியரென்
தக்கசீர்ச் செல்வ ராசா
தலைநகரில் வருமான வரித்திணைக் களத்தினில்
தான்கடமை புரியும் நல்லோன்
பெருமைதரு செல்லையா "ஹாயிபிறவுண்ஸ்" தன்னிலே
பெரியசீர்க் கடமை யாளன்
பேசவரு மிராசதுரை தன்னுடன் சீர்தரும்
பெட்புதரு மனைகள் கட்டப்
பெற்றதொகு பகுதிக்கு மேற்பார்வை யாளனுய்ப்
பேணு முயர்துரை சிங்கமென்
பேரின்ப ஐவரொடு பெற்றிட்ட சீர்ப்பாவைப்
பெண்ணெனும் மங்கை நல்லாள்
பெரிதுளம் மகிழ்கின்ற சிவபாக் கியம்பொனைப்
பெற்றிட்ட தந்தை யாகிப்
பேரர்பல கண்டகம் மகிழ்ந்துதினந் தோறுமே
பிராட்டியைத் தொழுது போற்றிப்
பேறுபெற நந்தாவில் கற்புலத் தம்மைபால்
பெரிதுளம் வைத்த பெரியான்
பேரின்ப மாய்வாழ்ந்து அழியாத முத்தியைப்
பெற்றுயர்ந் திட்ட னனரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலிவெண்பா

சீர்வளரும் கொக்குவிலூர் செய்த தவப்பேற்ருல்
ஏர்வளர வந்த எழிலாளன் — பார்வளர
நல்லவற்றைச் செய்துவந்து நம்பனடி தான்தொழுது
எல்லவரும் ஏற்க இருந்தமணி — பல்லறங்கள்
தான்வளர வர்த்தகனுய்த் தாய்மொழியும் சிங்களமும்
மேன்மைமிகப் பேசிவரும் மேதகையான் — வான்மகிழ
தென்புலத்தார் போற்றுமுயர் சீரார் விருந்தோம்பல்
இன்முகத்தோ டேற்று இதமகிழ்ந்து — அன்புசெயும்
பேரார் பரம்பரையாய்ப் பேசுமுயர் காராளன்
ஆராரும் போற்றும் அடியர்கள்பால் — நேராகச்
சென்று குறைகேட்டுத் தீர்த்துவைக்கும் கண்ணியத்தோன்
நன்று பலபுரிந்து நாடினரை — என்றும்
முகமலர வைத்து முதன்மைபெறத் தொண்டு
இகமிசையிற் செய்தே இருந்து — சகமீது
தன்போலப் பிள்ளைகளும் தான்வாழ வேண்டுமென்று
இன்பாய் இறையவனை ஏத்தியே — அன்பாகப்
பெற்ற முதன்மகனுர் பேசுபுகழ் கந்தையா
கற்ற படியொழுகுங் கண்ணியத்தோன் — மற்றவர்க்கு
தீங்கெண்ணுச் செம்மனத்துச் சீராள னுமிவனும்
ஓங்கும் புகழ்மருவும் உத்தமனே — ஈங்கு
அகில இலங்கைதமிழ் ஆசிரிய சங்கம்
திகழ வழிவகுக்கும் செல்வன் — புகழ்கருநாத்
தம்பையா தந்ததிரு தையல்சொர்ணம் மாஜெளன்னும்
அம்புவியில் ஆசிரியை ஆம்மின்னே — இம்பரிலே
ஏற்று மணமார்ந்து இல்லறத்தின் நற்பயனுய்த்
தோற்றும் படிபெற்ற சோதிமக்கள் — போற்றும்
இரவீந் திரனென்னும் ஏந்த(ல்)உமா ராணி
நரேந்திர னென்னுமுயர் நம்பி — வரவே
நலமார் சுசீந்திரனே நந்திவிவயைப் பின்னும்
நிலமேல் கமிலினியை நேர்ந்தும் — தலமேவ
மூவிருவ ராக மூதன்மகனுர் பேருறப்
பாவிலுயர் தொண்டுபுரி பண்புடையோன் — பூவிலுயர்
சித்திரத்துக் காசிரியர் செல்வரா சாப்பெருமன்
இத்தரையில் சீர்மை இலங்கவே — பத்திவளர்
செந்திருவாழ் அன்னம் சிவயோகம் ஆசிரியை
வந்துமண வாழ்வேற்க வாழ்த்தவே — தந்தமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பழகார் தேவி அறுசூயா முன்வரவே
தன்புகழார் செல்வி சசிலேகா — பொன்பரவும்
நங்கையெனும் அம்பிகையாள் நல்ல மலர்வதனி
மங்கை யெனும்சீர் மகிவதனி — இங்குவந்து
பெற்றிடவே கண்டு பேரழகார் ஐம்பெண்கள்
உற்றதெனச் சீர்பெற் றுளமார — நற்றிருவார்
செல்லையா வென்னுமுயர் சீர்த்திநிறை யாளனவன்
சொல்லுந் திருவனையாள் தோகையெனும் — நல்லகுணப்
பேரார் கமலாம் பிகைமானைக் கைப்பிடித்தே
சீராரத் தந்தமக்கள் செப்புவோம் — ஏராரும்
நான்முதலாம் நாற்குணத்து நங்கைபிரே மானந்தி
கேண்மைதரு நந்தகோபால் கீர்த்திவளர் — சேண்புகழார்
தங்கை சுதானந்தி தம்பியுயர் ராசகோபால்
இங்கிவர்பால் நால்வர் இதுவரைக்கும் — பொங்குபுகழ்
தங்குமுய ரைவர் சகோதரியாய் வந்ததிரு
எங்கும் புகழ்மணக்கு மேந்திழையாள் — மங்கைபுகழ்
சேர்ந்த சிவபாக் கியமென்னும் தேன்மொழியாள்
சேர்ந்த தவப்பயனும் நீக்கமற — ஓர்ந்தினிது
அப்புமாமி பிள்ளையெனும் அத்தான் முறைகாண
இப்புவிக்கண் வந்த இயலாளன் — செப்பவரு
கீர்த்திநிறை "ராம கிருஸ்ணைவ்" நிலையத்து
சீர்த்திதரத் தோன்றுமுயர் சீராளன் — சேர்த்தவுயர்
வேலா யுதபிள்ளை வித்தகனார் வர்த்தகனை
சீலமெனப் பெற்றுத் திருமணத்தால் ஞாலமிசை
மாண்பார் கருணை மலர்கருணை மூர்த்தியுடன்
காண்பார் மகிழும் கனிமொழியான் — மாண்புமிகு
சீர்க்கருணை னந்தனெனும் செல்வனையுந் தந்திடவே
பார்க்குமுயர் பேரர் பதினெட்டும் — நோக்கியுமே
இன்பமொழி கூறி இருந்தே மனையதனில்
அன்புமரு மக்கள் அனைவருடையார் — பொன்புகழார்
சொர்ணம்மா வென்னதிருத் தோகை சிவயோகம்
வர்ணகம லாம்பிகையின் வந்தபொன்னுள் — தர்மகுண
மங்கை புவனேஸ் வரிமானும் மாண்புதர
இங்குவே லாய்தபிள்ளை ஏந்தவுமே — தங்குமுயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவே யென்று மதிக்க மனங்களித்துக்
கோமா னெனப்போற்றக் கொண்டுமே — பூமகிழ
வந்துதினங் கண்டும் மகிழ்ந்து மவர்களுடன்
சொந்தமிகு புன்சிரிப்பால் சோதித்தும் — பந்தமற
நந்தாவில் கற்புலத்து நாயகியை நாடோறும்
சிந்தா குலமதனைத் திருமெனப் — பிந்தாது
நாளும் தொழுதேத்தி நன்னீர் மலர்பறித்து
ஆளும் படிவணங்கும் ஆண்டகையோன் — கேளுமிங்கு
ஆன வயதெண்பத் தாறென்னும் போதுவரை
தானம் தவமியற்றித் தாரணியில் — ஆனந்த
ஆண்டுவரு சௌமியத்தி லானதொரு சித்திரையில்
ஈண்டிருபத் தெட்டென் றெழுதேதி — பூண்ட
சதயம் அபரத் தசமியது கண்டு
இதயம் மகிழ இருந்தே — பதவிதனை
அப்பரவர் முத்திபெற்ற அந்தநாட் சித்திரையில்
ஒப்பும் சதயம் உணர்ந்ததனால் — இப்பவே
அன்னாரைப் போன்று அடைதலே மேலென்று
இன்னாளில் சென்றான் இராசையா — என்னாளும்
ஆற்றும் தவமே அழல்வண்ணன் பக்கமுய்க்கும்
தேற்றும் மனமே தெளி.

## மனைவி பிரலாபம்

### கொச்சகக் கலிப்பா

மங்கலநாண் வேய்கழுத்தில் மாண்புதர வேபுனைந்து
இங்கினிது மணியொலிபோல் இருந்தனமே யில்லறத்து
தங்கியநன் சீராளா ! " தம்பி " யெனக் கூப்பிடுவீர்
எங்கின்று சென்றனைநீர் என்துரையே கூறீரோ.

## மக்கள் பிரலாபம்

### கட்டளைக் கலித்துறை

சீர்தங்கு பாண்டுவின் புத்திரர் போன்றிங்கு சீர்மிகவே
பேர்தங்கு மைவரப் பெற்றிட்ட அப்புவே பேரன்பினால்
ஏர்தங்க நல்லன வெல்லா மளித்தனை எம்மைவிட்டு
நீர்சென்ற தெவ்விதி துன்பந் துடைத்திட நின்றிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எழுசீர் விருத்தம்

அனலேந்து கைய னடிமீது சேர
அரிதான ஐய! இதுகால்
மனமேது வந்த தொருபோது தானும்
மனதார எம்மை மறவீர்
இனமேது சொல்லு மிங்கைவர் நாங்கள்
இருக்கின்ற போது இடையில்
தினமாரத் துன்ப மதுதந்து இன்று
சிவலோக மேகல் முறையோ!

## மகள் பிரலாபம்

### அறுசீர் விருத்தம்

மகளினைப் பெறவே வேண்டி மனம்நினைந் துருகி நின்று
புகழுறும் அம்பாள் தன்னைப் போற்றிசெய் தென்னைப் பெற்றுத்
தகமைசேர் கல்வி தந்து தலைவனை யன்பா யீந்து
இகமிசைப் புகழைச் சேர்த்த எந்தையே எங்குற் றுயே.

## மருமகன் பிரலாபம்

தங்கையின் மகனே யென்று தக்கசீர் காட்டிக் காட்டி
மங்கல மனையாள் தன்னை மகிழ்ந்தெனக் களித்த மாமா
எங்கிருந் தாலு மென்பால் இதம்மகிழ் சுகமே கேட்பீர்
உங்களை இனிநான் காண்ப துண்டதோ உலக மீது.

## மருமக்கள் பிரலாபம்

### வெண்பா

மாமாவே யென்று மதித்து மகிழ்ந்திருந்தோம்
தாமாக வந்து தகவுரைப்பீர் — நாமாக
உங்களையே தந்தையென உள்ளன்பி லிருந்தோம்
எங்களையேன் நீத்தனைநீர் இன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறந்தோர் பிரலாபம்

தக்க உடன்பிறப்பாய்த் தாரணியில் வந்துதித்து
மிக்க மதிபுகட்டும் மேதகையே—தொக்கதெலாம்
இங்கினிது பெற்றிடலாம் எம்மண்ணு சோதரரை
எங்குநாம் கொள்வோம் இயம்பு.

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

### கட்டளைக் கலித்துறை

அப்புவென் றும்மை அழைத்திடும் போது அகமகிழ்ந்து
எப்போதும் கொஞ்சி விளையாடி எம்மோ டிருந்தனைநீர்
தப்பேதும் நாங்கள் புரிந்திட்ட போதும் தயவளிப்பீர்
இப்போதெங் குற்றனை யார்தய வீகுவர் எங்களுக்கே.

## தேற்றம்

### நேரிசை வெண்பா

நேற்றிருந்தா ரின்றில்லை நீடுபுகழ் ராசையா
பேற்றையடைந் தானந்தம் பெற்றனனுல்—தோற்றியசீர்
மக்கள் மனைவிமரு மக்களவர் மக்களெலாந்
துக்கமற்று வாழ்க சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

## 1-ம் திருமுறை

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே. 1

## 2-ம் திருமுறை

பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈடமார்ந்து இருங்கடற் கரையினி லெழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. 2

## 3-ம் திருமுறை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த வடிவினர் கொடிஅணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர் தாரே. 3

# திருநாவுக்கரசு தேவாரம்

## 4-ம் திருமுறை

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சி ரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5-ம் திருமுறை

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 5

## 6-ம் திருமுறை

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே. 6

## சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரம்

## 7-ம் திருமுறை

மூவரென இருவரென முக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே. 7

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

## 8-ம் திருமுறை

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த வாரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தா யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே. 9

## சேந்தனர் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

## 9-ம் திருமுறை

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. 10

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ
னடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 11

## திருமூலர் திருமந்திரம்

## 10-ம் திருமுறை

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தடிகள் பாடல்

## 11-ம் திருமுறை

நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினால்
தன்னாலு மாடிச் சலித்திடு மோயத்தன் மையைப்போல்
உன்னாலி யானுந் திரிவதல் லால்மற் றுனைப்பிரிந்தால்
என்னாலிங் காவதுண் டோஇறை வாகச்சி ஏகம்பனே. 13

## பெரிய புராணம்

## 12-ம் திருமுறை

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவு மதுர வாக்கிற்
சேர்வாகும் திருவாயிற் றீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற்றாளே
சார்வான திருமனமு முழவாரத் தனிப்படையுந் தாமு மாகி
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச்
செல்வார் 14

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும்இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீ ழிருக்கஎன்றார். 15

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே. 16

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org